(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13 (4).]

# பாராளுமன்றம்

## 13 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 பெப்புருவரி 07 சனிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2015 பெப்புருவரி 18, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள்,— 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதிய 1892/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## 2015 மாச்சு 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4399/ ’13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்ட வன உத்தியோகத்தர் பிரிவு அலுவலகங்களினால் நிருவகிக்கப்படும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) குறித்த காணிகளில் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பைனஸ் மற்றும் ஏனைய வனப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளை தனிநபர்கள் அனுமதியின்றி கைப்பற்றி உள்ளார்கள் என்பதையும்;

(ii) குறித்த காணிகளில் ஒரு பகுதியை அரசாங்கம் பொது மக்களுக்கு வழங்கியுள்ளதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வனப் பிரதேசத்தில், தனிநபர்கள் அனுமதியின்றிக் குடியமர்ந்துள்ள காணியின் அளவு மற்றும் அரசாங்கத்தினால் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒதுக்கு வனப் பிரதேசங்கள், மேலே கூறப்பட்டுள்ளவாறு மனிதனின் தேவைக்காக பயன்படுத்தப்படுவதால் நீரேந்து பிரதேசங்கள் அழிந்துவிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இந்த நிலைமையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4581/ '13

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அரச வருமானம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி இரண்டு ஆண்டுகளுக்காகவும் அரசாங்கம் பெற்றுள்ள கடன்களுக்காக செலுத்தப்பட்ட வட்டித் தொகை மற்றும் கடன் தவணைப் பணம் வருடாந்தம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்ட கடன் மற்றும் வட்டித் தவணைகளின் கூட்டுத்தொகை வருடாந்த அரச வருமானத்தின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4773/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வைத்தியசாலைகளில் மருந்துகள் பற்றாக்குறைக்கு தீர்வாக பிரதேச ரீதியில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(ii) அதற்காக விலை மனுக்கள் பெறப்படுகின்ற முறை யாது;

(iii) மேற்படி விலை மனுக்களை மருத்துவ வழங்கல் பிரிவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iv) பேராதனை பொது வைத்தியசாலையில் மருந்துகளை கொள்வனவு செய்கின்றபோது நேரிட்டுள்ள மோசடிகள் தொடர்பாக அமைச்சு அறிந்துள்ளதா

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5114/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட பிரேரணைகளில் உள்ளடக்கப்பட்ட, பெண்களுக்கான வட்டியற்ற கடன் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக்கொள்ளக்கூடிய முறை யாதென்பதையும்;

(iv) கடன் பெறுவதற்காக பெண்கள் பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் யாவையென்பதையும்;

(v) அதற்கு பிணையாளர்கள் அல்லது பிணைகள் அவசியமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது மேற்படி வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையிலும் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி கடன் திட்டம் தற்போது அமுல்படுத்தப்படுவதில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5192/ '14

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் யாது;

(ii) மேற்படி மீனவர் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத் தரப்பினரின் தலையீடு யாது;

(iii) தற்போது இந்தியாவின் ஆந்திரா பிரதேசத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களை விடுவிப்பதில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தலையீடு யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டிருப்பின், இதற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுத் தீர்விப்பொதியொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அது யாது;

(iii) மேற்படி நிவாரணப் பொதிக்கும் எரிபொருள் மானியத்துக்கும் இடையிலான வேறுபாடு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4529/ '13

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 வரவு - செலவுத் திட்டத்தின் மூலம்,

(i) தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் சிறுவர்நேய சூழலுடையதாக அபிவிருத்தி செய்யப்படுமெனவும்;

(ii) மேற்படி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுகின்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் இலவசமாக தானியம், முட்டை மற்றும் பாலுடனான உணவை வழங்குவதாகவும்;

(iii) மேற்படி பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒரு சோடி பாதணிகளையும் வருட மத்தியில் மேலதிக சீருடையொன்றையும் இலவசமாக பெற்றுத் தருவதாகவும்

முன்மொழியப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள சிறுவர்நேய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி (அ) (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) அவ்வாறெனில், மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4775/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் காணப்படும் பதிவு செய்யப்பட்ட மருந்தகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்நாட்டில் இருக்கின்ற பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்களின் எண்ணிக்கை மற்றும் மருந்து விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) எமது நாட்டுக்குத் தேவையான மருந்தாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மருந்தாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறையியலொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5091/ '14

கௌரவ அநுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 வருடங்களில் இலங்கை அரசினால் பாலஸ்தீன அரசுக்கு ஏதேனும் நிதியுதவிகள் அல்லது கருத்திட்டங்களுக்கான உதவிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் இவ் உதவிகளின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அந்நாட்டுக்கு ஏதேனும் நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள் வழங்கப்பட்டிருப்பின் இந் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(iv) இந் நிதியுதவி அல்லது கருத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் நோக்கம் யாது என்பதையும்;

(v) இலங்கை அரசு பெருமளவில் வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டியிருக்கையில் மேற்குறிப்பிட்டவாறு வேறு நாடொன்றுக்கு உதவியளித்தல் பயனற்றதொரு செயற்பாடு அல்லவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5115/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் ஒட்டுமொத்த வர்த்தகர்களுக்காகவும் பெறுமதி சேர் வரி செலுத்துவதற்கும் அது சம்பந்தமாக செயற்படுவதற்காகவும் நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்கள் ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையிலும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) வருமான வரி செலுத்துதல் மற்றும் அது சம்பந்தமாக செயற்படுவதற்காக தாபிக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5424/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புகையிரத திணைக்களத்தின் பயிற்சிபெற்ற கைவினை அடிப்படையிலான சேவைப் பிரமாணங்களின் பிரகாரம், 1997.01.01 தொடக்கம் சகல பயிற்சி பெற்ற கைவினைஞர்களும் மேற்படி சேவையில் உள்வாங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) வேறு எந்தவொரு சேவைப் பிரமாணங்களிலும் காணப்படாத நிபந்தைனையாக மேற்படி சேவையின் பிரிவுகள் மற்றும் பதவியுயர்விற்கு ஏற்ப "அ" பிரிவிலுள்ள கைவினைஞர்களுக்கு முதல் வகுப்பிற்கான பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்ற போது 6:1 விகிதாசாரம் பின்பற்றப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்படி விகிதாசாரம் 6/2006 சுற்றறிக்கை அமுல்படுத்தப்படுகின்றபோது மாற்றப்படுமென பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் இணங்கியிருப்பதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) எனினும், இற்றைவரை 6/2006 இன் பிரகாரம் பதவியுயர்வு நடைமுறையைத் தயாரிப்பதற்கு தவறியுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், இதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி பிரச்சினையின் காரணமாக சம்பள உயர்வின் உச்ச வரம்பில் உள்ள பெரும் எண்ணிக்கையான ஊழியர்களுக்கு அநீதி நேரிடுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4776/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுதாய ஆரோக்கியத்தை கட்டியெழுப்புவதற்காக இற்றைவரை தாபிக்கப்பட்டுள்ள "சுவ திவி நிலையங்களின்" எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றில் தற்போது இயங்கி வருகின்ற நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள "சுவ திவி நிலையங்களின்" எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) குருநாகல் மாவட்டத்தில் தற்போது இயங்கி வருகின்ற மேற்படி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) கண்டி மாவட்டத்தில் தாபிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ள "சுவ திவி நிலையங்களின்" எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) தற்போது மேற்படி மாவட்டத்தில் இயங்கி வருகின்ற "சுவ திவி நிலையங்களின்" எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) "சுவ திவி நிலையங்களில்" போதியளவு பிணி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4813/ '14

கௌரவ புத்திக்க பத்திரண,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டு தற்போது சுதந்திர வர்த்தக வலயத்தில் வாகனங்களை பொருத்தி விற்பனை செய்யும் தொழில்முயற்சியொன்றை நடத்திவரும் வ/ப வெஹிகல்ஸ் லங்கா தனியார் நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் ஒரு மாதத்தினுள் பதிவு செய்யப்படுமென மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கடிதமொன்று கொள்வனவாளர்களுக்கு காண்பிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) எனினும், மேற்படி நிறுவனத்தினால் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்படுவதை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நிராகரிக்கின்றதென்பதையும்;

(iii) இதனால், மேற்படி நிறுவனத்திலிருந்து மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்துள்ள பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் தமது வாகனங்களை செலுத்த முடியாது கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வ/ப வெஹிகல்ஸ் லங்கா தனியார் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5092/ '14

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 வருடங்களில் இலங்கை அரசினால் உகண்டா அரசுக்கு ஏதேனும் நிதியுதவிகள் அல்லது கருத்திட்டங்களுக்கான உதவிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் இவ் உதவிகளின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அந்நாட்டுக்கு ஏதேனும் நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள் வழங்கப்பட்டிருப்பின் இந் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(iv) இந் நிதியுதவி அல்லது கருத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் நோக்கம் யாது என்பதையும்;

(v) இலங்கை அரசு பெருமளவில் வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டியிருக்கையில் மேற்குறிப்பிட்டவாறு வேறு நாடுகளுக்கு உதவியளித்தல் பயனற்றதொரு செயற்பாடு அல்லவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5117/'14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்சக்தி, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டினுள் மேல் கொத்மலை நீர் மின் நிலையத்தின் மூலம் மின் உற்பத்தி செய்யப்படாதிருந்த நாட்கள் எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு மின் உற்பத்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டில் மேல் கொத்மலை நீர் தேக்கத்தை திடீரென வெறுமையாக்க நேரிட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நீர் தேக்கம் வெறுமையாக்கப்பட்டபோது நீர் வெளியேற்றப்பட்டது மின் பிறப்பாக்கியின் ஊடாகவா அல்லது வேறு வழியிலா என்பதையும்;

(iv) அவ்வாறு செய்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேலே குறிப்பிட்டவாறு நீர் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் நீர் தேக்கத்தினுள் காணப்பட்ட நீர் மட்டம் யாதென்பதையும்;

(vi) வெளியேற்றப்பட்ட நீரின் அளவு நீர் தேக்கத்தின் நீர் கொள்ளளவில் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே குறிப்பிட்டவாறு மேல் கொத்மலை நீர் தேக்கத்தை திடீரென வெறுமையாக்குவதற்கு நேரிட்டதன் காரணமாக இலங்கை மின்சார சபைக்கு எற்பட்ட நட்டம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5500/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் ஊழியரொருவருக்கு குறைந்த பட்சம் ரூபா 96,000 தொகை மற்றும் அதிகபட்சம் ரூபா 265,000 தொகை என்ற ரீதியில் இழப்பீட்டுத் தொகையை செலுத்தி 1990.03.31 ஆம் திகதியிலிருந்து மேற்படி நிறுவனம் மூடப்படுமென அப்போதைய அரசாங்கத்தின் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் 1990.03.23 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதென்பதையும்;

(ii) அவ்வாறு அறிவிக்கப்பட்ட போதிலும் மேற்படி ஊழியர்களுக்கு ரூபா 50,000 மாத்திரமே செலுத்தப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பெரும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளார்களென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையில் சேவையாற்றிய மேலே குறிப்பிட்ட ஊழியர்களுக்கு எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப்போதைய ஆற்றுப்பள்ளத்தாக்குச் சபைக்கு சொந்தமாக இருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் உரிமை, அச் சந்தர்ப்பத்தில் அங்கு குடியிருந்த ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்றும், வீடுகள் இல்லாத ஏனைய ஊழியர்களுக்கு காணிகள் பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்ட கூற்றின் பிரகாரம், இன்றளவில் சகல ஊழியர்களுக்கும் வீடுகள் அல்லது காணிகள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீடுகள் அல்லது காணிகளுக்கு இன்றளவில் உறுதிப் பத்திரங்கள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2015 மாச்சு 04, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4533/ '13

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 வரவு-செலவு திட்டத்தின் மூலம் பொலிஸ் திணைக்களத்தில் கடைமையில் ஈடுபட்டுள்ளவர்களின் குடும்பங்களின் பொருளாதாரத்தை வலுபடுத்துவதற்காக அக் குடும்பங்களின் மூன்றாவது பிள்ளையின் பிறப்புக்காக ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமென பிரேரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பிரேரணையின் பிரகாரம் 2011, 2012, 2013 ஆம் மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்படி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வருட ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இதற்காக அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மொத்த செலவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பொலிஸ் திணைக்களத்தில் கடமையில் ஈடுபட்டுள்ளவர்களின் குடும்பங்களின் மூன்றாம் குழந்தையின் பிறப்புக்காக ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்ற வேலைத்திட்டம் தற்போதும் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) தற்போதுகூட பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவர் மேற்படி கொடுப்பனவை பெறுவதற்காக பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4778/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மொத்த வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2012 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் தரத்தை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மாகாண சபைகளின் மூலம் பிரதேச வைத்தியசாலைகளுக்கு அவசியமற்ற உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன என்பதை அறிவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண சபை வைத்தியசாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை ஒவ்வொரு மாகாண சபை வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5093/ '14

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 வருடங்களில் இலங்கை அரசினால் மாலைதீவு அரசுக்கு ஏதேனும் நிதியுதவிகள் அல்லது கருத்திட்டங்களுக்கான உதவிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் இவ் உதவிகளின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அந்நாட்டுக்கு ஏதேனும் நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள் வழங்கப்பட்டிருப்பின் இந் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(iv) இந் நிதியுதவி அல்லது கருத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் நோக்கம் யாது என்பதையும்;

(v) இலங்கை அரசு பெருமளவில் வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டியிருக்கையில் மேற்குறிப்பிட்டவாறு வேறு நாடொன்றுக்கு உதவியளித்தல் பயனற்றதொரு செயற்பாடு அல்லவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5118/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின் வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குக்குலேகங்க மின் உற்பத்தி நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயந்திரத்தினதும் மின் உற்பத்தி ஆற்றல் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டு பூராகவும் மேற்படி அனைத்து மின் பிறப்பாக்கிகளும் இயங்கியதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி மின் பிறப்பாக்கிகளில் செயலிழந்திருந்த இயந்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு இயந்திரமும் செயலிழந்திருந்த காலம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

(iv) மேற்படி மின் பிறப்பாக்கிகள் செயலிழப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) எதிர்காலத்தில் மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் இயந்திரங்கள் செயலிழக்காதிருப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5444/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) படைப்பிரிவு இலக்கம் சி / 5 A02691 ஐ கொண்ட லான்ஸ் கோப்ரல் எஸ்.பி.கே. வன்னிஆரச்சி என்பவர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும்போது 2007.05.25 ஆம் திகதியன்று மரணித்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இறந்த இராணுவ உறுப்பினரின் மனைவிக்கு கிடைக்க வேண்டிய சம்பளத்தை வழங்குதல் 2013 சனவரி மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவரது முன்னாள் மனைவி, இவர் பின்னர் விவாகம் செய்த மனைவிக்கும் பிள்ளைக்கும் மேற்படி சம்பளத்தை பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் ஆட்சேபனை இல்லையென எழுத்து மூலம் அறிவித்துள்ளாரா என்பதையும்;

(iii) மேற்படி இறந்த இராணுவ உறுப்பினரின் மனைவியான ஹேமந்தி பிரியதர்ஷனி என்பவருக்கு சம்பளத்தில் 50%, பிள்ளைக்கு 50% என்றவாறு மீண்டும் சம்பளம் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், முன்னர் வழங்கப்பட்ட சம்பளத்தின் பாதியே தற்போது செலுத்தப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் அந்த இராணுவ வீரருக்கு உரித்தான சம்பளத்தின் பாதியை மாத்திரம் செலுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4534/ '13

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 யூலை வேலைநிறுத்தத்தின்போது தொழிலை இழந்தவர்களில் இற்றைவரை நிவாரணம் எதுவும் கிடைக்காதவர்களுக்கு ரூபா 5000.00 கொடுப்பனவொன்று வழங்கப்படுமென்ற 2013 வரவு செலவு திட்ட முன்மொழிவின்படி இற்றைவரை இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவை செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் இற்றைவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கின்றபோது எவ்வித நலனும் பெறாது மரணித்த யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்குரிய மேற்படி நன்மைகளை சம்பந்தப்பட்ட உரிமையாளர்களின் பெற்றுக்கொடுத்தல் தொடர்பில் பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) 1980 யூலை வேலைநிறுத்தத்தில் பங்கேற்று இற்றைவரை நிவாரணம் பெற்றுக்கொள்ளாத எவரேனுமொருவர் மேற்படி பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4780/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த மருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மருந்துகளை பதிவு செய்வதற்கு செயற்படுத்தப்படும் தற்போதைய முறையியல் யாதென்பதையும்;

(iii) மருந்துகள் பதிவு செய்யப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதேனுமொரு முறையியலை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5095/ '14

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 வருடங்களில் இலங்கை அரசுக்கு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அல்லது ஏதேனும் தூதுவராலயத்துக்கு வெளிநாடுகளில் இந்நாடு தொடர்பான சாதகமான மனப்பாங்குகளைக் கட்டி எழுப்புவதற்கான ஆலோசனை வழங்குவதற்கு ஏதேனும் வெளிநாட்டுக் கம்பனியின் சேவை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அக்கம்பனியின் பெயர் யாது என்பதையும்;

(iii) இக்கம்பனி எந்த நாட்டுக்குரியது என்பதையும்;

(iv) இக் கம்பனி தேர்ந்தெடுக்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(v) இவ்வாறானதொரு கம்பனியின் சேவையைப் பெறுவதற்கான நோக்கம் யாது என்பதையும்;

(vi) மேற்குறிப்பிட்ட விடயத்துக்காக குறித்த கம்பனிக்கு செலுத்தப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(vii) இதற்கான பணத்தொகை செலவிடப்பட்ட செலவுத் தலைப்பு யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5120/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 / 2014 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக மாணவர்களுக்காக 60 விடுதிகளை நிர்மாணிப்பதற்கு உயர் கல்வி அமைச்சு ஏதேனும் நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை செய்துகொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புகள் தொடர்பாக உடன்படிக்கை செய்துகொண்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணிப்பு நிறுவனங்களை தெரிவுசெய்கின்றபோது ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல் மேற்படி நிறுவனங்களை தெரிவு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்துக்கும் நிர்மாணிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள விடுதிகளின் எண்ணிக்கை மற்றும் மேற்படி நிர்மாணிப்புகள் தொடர்பாக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) ஒவ்வொரு உடன்படிக்கைதாரரும் விடுதி நிர்மாணிப்பை பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள திகதி யாதென்பதையும்;

(iii) நிர்மாணிக்கப்படும் ஒவ்வொரு விடுதியிலும் தங்குமிட வசதி வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு விடுதியையும் நிர்மாணிப்பதற்காக உயர் கல்வி அமைச்சு செலவிடும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4781/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நாட்டினுள் மருந்து விலைக் கட்டுப்பாடொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) சில காலங்களுக்கு முன்னர் இலங்கையில் மருந்து விலைக் கட்டுப்பாடொன்று நடைமுறையிலிருந்ததென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விலைக் கட்டுப்பாடு நடைமுறையில் இருந்த காலகட்டம் யாதென்பதையும்;

(iv) மேற்படி காலகட்டத்தினுள் கட்டுப்பாட்டு விலையை கொண்டிருந்த மருந்து வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மருந்து விலைக் கட்டுப்பாட்டுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழு தற்போது அதற்கு ஏற்புடையதான விதப்புரைகளை வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4819/ '14

கௌரவ புத்திக பத்திரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப் படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை விமானப் படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்விசாரணையின் பெறுபேறு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5096/ '14

கௌரவ அனுர திஸாநாயக்க,— உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உலக உணவு அமைப்புக்கு அன்பளிப்புச் செய்வதாக முன்மொழியப்பட்ட அரிசியின் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அதன் பிரகாரம், இற்றைவரை அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள அரிசித்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த அரிசித் தொகை எந்நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி அரிசித் தொகை நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், இதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபை செலவு செய்த பணத்தொகை யாதென்பதையும்;

(v) மேற்படி அரிசித் தொகைக்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டிருந்த நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) அதன் பிரகாரம், ஒரு மெட்ரிக் தொன் அரிசிக்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5142/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரையிலான காலத்தினுள் இடம்பெற்றுள்ள புகையிரதங்கள் - புகையிரதங்களுடன் மோதுதல், தடம் புரள்தல் மற்றும் புகையிரதப் பெட்டிகளின் இணைப்பு துண்டிக்கப்படுதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய விபத்துக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி புகையிரத விபத்துக்கள் நடைபெற்ற இடங்கள், திகதி மற்றும் விபத்துக்களின் இயல்பு, பயணிகளுக்கு ஏற்பட்ட சேதம் என்பன தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட புகையிரத விபத்துக்கள் நடைபெறுவதற்கான காரணங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி விபத்துக்களின் காரணமாக ஏற்பட்ட நட்டம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டவாறான விபத்துக்களைத் தவிர்த்து புகையிரத போக்குவரத்துச் சேவையின் மூலம் பொது மக்களுக்கு நம்பகத்தன்மையுடன் கூடிய சேவையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 மாச்சு 06, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4537/ '13

கௌரவ புத்திக பத்திரண,— உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 வரவு செலவு திட்டத்தின் கீழ் சிலாவத்துறை, கந்தர, குருநகர், தலமெட்டியாவ, மிரிஸ்ஸ, ஹிக்கடுவ, பேருவலை, காலி, மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய கடற்றொழில் துறைமுகங்களை புனரமைப்பதற்கு முன்மொழியப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கடற்றொழில் துறைமுகத்தையும் புனரமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) முன்மொழிவின் கீழ் இற்றைவரை புனரமைக்கப்பட்டுள்ள கடற்றொழில் துறைமுகங்கள் யாவையென்பதையும்;

(iv) 2013 வரவு-செலவுத் திட்டத்தின் பிரகாரம் இற்றைவரை புனரமைக்கப்படாதுள்ள கடற்றொழில் துறைமுகங்கள் யாவையென்பதையும்;

(v) வரவு செலவு திட்டத்தினால் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை மேற்படி (iv) க்கு ஏற்புடையதான துறைமுகங்கள் புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் யவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4654/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சேமிப்பு வங்கியில் கூலி அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலக உதவியாளர்களை நிரந்தர சேவையில் இணைப்பதற்காக பணியாட்டொகுதி முகாமையாளரின் 7/2012 ஆம் இலக்க 2012.02.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் விபரங்களும் விண்ணப்பங்களும் கோரப்பட்டன என்பதையும்;

(ii) இலங்கை வங்கியாளர் நிறுவனத்தினால் இதற்கான பரீட்சையொன்று 2012.03.18 ஆம் திகதி நடத்தப்பட்டதென்பதையும்;

(iii) தேவையான தமைமைகளை பூர்த்தி செய்திருந்த 218 பேர் மேற்படி பரீட்சைக்கு தோற்றினார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையில் சித்திபெற்றவர்களை நிரந்தர சேவையில் இணைப்பதற்ககாக இவர்கள் சேவையாற்றிய கிளை மற்றும் பிரிவுத் தலைமை அதிகாரிகளிடம் இவர்களது செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கையொன்று கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி அறிக்கை கோரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி அறிக்கையின் அடிப்படையில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்களை நிரந்த சேவையில் இணைக்கும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4782/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் பேணிவரப்படுகின்ற உணவகங்கள் மற்றும் வாகனத் தரிப்பிடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உணவகங்கள் மற்றும் வாகனத் தரிப்பிடங்களுக்காக கேள்விப்பத்திரங்களை கோருவதற்கான அதிகாரத்தை கொண்டுள்ள நிறுவனங்கள் அல்லது தரப்புகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கோ அல்லது மாகாண சபைக்கோ உரித்தாயுள்ளதெனில், அரச நிறுவனங்களின் உணவகங்கள் மற்றும் வாகனத் தரிப்பிடங்களுக்கு கேள்விப்பத்திரங்களை கோரும்போது பின்பற்றப்படுகின்ற முறையியல் மேற்படி வைத்தியசாலைகள் தொடர்பாகவும் பின்பற்றப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5209/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை வீட்டு மின் பாவனையாளர் கட்டணப் பட்டியலில் எரிபொருள் சீராக்கல் கட்டணத்தை சேர்த்துக்கொள்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், எரிபொருள் சீராக்கல் கட்டணமாக அறவிடப்படுகின்ற பணத்தொகை எத்தனை சதவீதம் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழிலுக்காகப் பெறப்படுகின்ற மின்சாரத்திற்காக கட்டணம் அறவிடுகின்றபோது மேற்படி கட்டணம் கைத்தொழில்களுக்கு ஏற்புடையவாறு அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) பாடசாலைகளுக்கான மின்கட்டணம் அறவிடுதல் எந்த வகைப்படுத்தலின் கீழ் நடைபெறுகின்றதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4538/ '13

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களின் திறன்களை உயர் மட்டத்திற்குக் கொண்டுவரும் பொருட்டும் அந்நாடுகளின் சமூக, கலாச்சார சூழலுக்கு இயைபாக்கம் அடைவதை இலகுபடுத்துவதற்குமான விசேட பாடநெறிகளைக் கொண்ட புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில்நுட்ப கல்லூரிகள் இரண்டினை நிறுவுவதற்கு பிரேரிக்கப்பட்டதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி இரண்டு கல்லூரிகளும் நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) இதற்காக முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சியளிக்கப்படுகின்ற தொழில்துறைகள் யாவையென்பதையும்;

(v) தற்போது மேற்படி நிறுவனங்களிலிருந்து பயிற்சிகளைப் பெற்று வெளிநாட்டு தொழில்களுக்காக சென்றுள்ள வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4783/ '14

கௌரவ அஷோக் அபேசிங்க,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தினுள்,

(i) குருணாகல் மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதலினால் மரணித்த ஆட்களின் எண்ணிக்கை;

(ii) மனித செயற்பாடுகளின் காரணமாக மேற்படி மாவட்டத்தினுள் உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை;

(iii) நாடு முழுவதிலும் உயிரிழந்த காட்டு யானைகளின் எண்ணிக்கை

வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5210/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டினுள் வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் "டிமோ பட்டா" வாகனங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏதுவாக கடன் வசதிகளை வழங்கிய நிதி நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டினுள் மேற்படி கருத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிதி நிறுவனங்களினாலும் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஆண்டினுள் மேற்படி கருத்திட்டத்திற்காக ஒவ்வொரு நிதி நிறுவனத்தினாலும் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் சபா பீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி வாகனங்களுக்காக கடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களில் உரியவாறு கடன் தவணைகளை திருப்பிச் செலுத்துகின்றவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கடன் தவணைகளை திருப்பிச் செலுத்தும் சதவீதம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் டிமோ பட்டா வாகனங்களை வழங்கும் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5265/ '14

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சேமிப்பு வங்கிக்கு வங்கி உதவியாளர் (எழுதுநர்) தரத்திற்குப் பணியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக 2014 மே மாதம் 31, யூன் மாதம் 01 மற்றும் யூன் மாதம் 07, 08 ஆகிய வார இறுதி நாட்களில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதா என்பதையும்;

(ii) நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருப்பின், அதற்காக வர்த்தமானப் பத்திரிகை மூலம் அல்லது பத்திரிகை மூலம் விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறு பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்படவில்லையெனில், நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்காக விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆட்களை ஊவா மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் ஆட்சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5770/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல - குளியாப்பிட்டி வீதி அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு உரியதான வீதியின் நீளம் மற்றும் அகலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கான நிர்மாணிப்பாளர் கேள்விப்பத்திர நடைமுறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்பதையும்;

(iv) ஆமெனில் தேர்ந்தெடுக்கப்பட்ட விலைக்கேள்வியாளரின்/நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்திற்கான நிதி பெற்றுக்கொள்ளப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி வீதியின் ஒரு கிலோ மீற்றரை நிர்மாணிப்பதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீதியின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் வாகனப்போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்கான வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், முழுக் கருத்திட்டத்தின் ஊடாக அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பாதிக்கப்படுகின்ற தரப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், நட்டஈடு வழங்கப்பட்டுள்ளவர்களின் விபரங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4589/ '13

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியமொன்றை வழங்குவதற்காக 2010 சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக கடைப்பிடிக்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகின்றபோது வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களால், தொழில் நிறுவனத்தினால் மற்றும் அரசாங்கத்தினால் பங்களிப்புச் செய்யப்படும் விதம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஓய்வூதியமாக மாதாந்தம் வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கின்ற பணத் தொகை யாதென்பதையும்;

(iv) வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் உலகின் ஏனைய நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5211/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளக போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கொட்டாவை - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பேரூந்து வண்டிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2013.08.06 ஆம் திகதிய "லங்காதீப" உள்ளிட்ட பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்விப்பத்திர அறிவித்தலுக்கமைய அந்த பேரூந்து வண்டிகள் தெரிவு செய்யப்பட்டனவா என்பதையும்;

(iii) இன்றேல், அந்த பேரூந்து வண்டிகளை தெரிவுசெய்வதற்காக பின்பற்றிய முறைசார்ந்த வழிமுறை யாதென்பதையும்;

(iv) மேற்கூறிய பத்திரிகை அறிவித்தலுக்கமைய செயற்படாவிடின், அவ்வாறு செயற்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்கூறிய அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் போக்குவரத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட தனிநபர் பேரூந்து வண்டிகளின் பதிவு இலக்கங்கள் மற்றும் அந்த பேரூந்து வண்டிகளின் உரிமையாளர்களின் பெயர்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தற்போதைய செயற்பாட்டுப் பணிப்பாளரின் பெயர் என்ன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்த்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பதிரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பதிரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிகக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ ’10

கௌரவ புத்திக பதிரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ ’10

கௌரவ புத்திக பதிரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ ’10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ ’10

கௌரவ புத்திக பதிரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 105/ ’10

கௌரவ புத்திக பதிரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ ’10

கௌரவ புத்திக பதிரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பதிரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலைமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பதிரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பதிரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

கௌரவ புத்திக பதிரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பதிரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பதிரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பதிரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.138 / 11

கௌரவ புத்திக பதிரண,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

கௌரவ புத்திக பதிரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.159/ '12

கௌரவ புத்திக பதிரண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.160/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.162/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.163/ '12

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.170/ '12

கௌரவ புத்திக பதிரண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.171/ '12

கௌரவ புத்திக பதிரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.172/ '12

கௌரவ புத்திக பதிரண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.175/'13

கௌரவ புத்திக பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.176/'13

கௌரவ புத்திக பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.177/'13

கௌரவ புத்திக்க பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.178/'13

கௌரவ புத்திக பதிரண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.179/'13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.180/'13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.191/ '13

கௌரவ புத்திக பதிரண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.192/ '13

கௌரவ புத்திக பதிரண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.197/ '13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையினுள் சேலைன் உற்பத்திக்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— இலங்கையினுள் வருடாந்தம் பாரியளவில் சேலைன் பயன்படுத்தப்படுவதுடன், சேலைன் இறக்குமதிக்காக பாரியளவு நிதி வருடாந்தம் வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுவதால், மேற்படி வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் சேமிக்கும் நோக்கத்துடன், இலங்கையினுள் காணப்படுகின்ற உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேலைன் உற்பத்தி செய்வதற்கு அரச, தனியார்துறை அல்லது கூட்டுறவுத்துறையை இணைத்துக் கொண்டு முறையானதொரு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் உருவாக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.198/ '13

கௌரவ புத்திக பதிரண,— தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்திகளை உருவாக்குதல்,— இலங்கையில் வருடாந்தம் பெருமளவில் தேங்காய் நீர் விரயமாவதால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உருவாக்குவதற்கான முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.201/' 14

கௌரவ புத்திக பதிரண,— கடலில் புதிய வளங்களை ஆய்வு செய்தல்,— மிகப் பெரிய கடற் பிராந்தியத்தைக் கொண்டுள்ளதொரு நாடான இலங்கை, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்துள்ளதோடு, கடல் சார்ந்ததாக பெருமளவு இயற்கை வளங்கள் காணப்படுவதால், நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புகளையும், செல்வத்தையும் ஈட்டும் நோக்கத்துடன் கடல் வளங்கள் தொடர்பாக முறைசார்ந்த மேலதிக ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.202/' 14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் மீன் வளத்தை வெளிநாட்டவர்கள் பிடிப்பதைத் தடுத்தல்,— இலங்கையின் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் இலங்கை கடற் பிராந்தியத்திலுள்ள மீன் வளம் வெளிநாட்டவர்களினால் பிடிக்கப்படுவதால், இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடிப்பதையும், வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான இறங்குதுறையாக பயன்படுத்துவதையும் தடுப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.203/' 14

கௌரவ புத்திக பதிரண,— பலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்,— மிகவும் சுவையானதும், மருத்துவக் குணம் கொண்டதும், இரசாயனப் பதார்த்தங்கள் இன்றி பயிரிடக் கூடியதுமான பலாச் செய்கையை விஸ்தரிப்பதன் ஊடாக அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளதால், அது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.204/' 14

கௌரவ புத்திக பதிரண,— தேசிய கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்றை வருடாந்தம் ஒழுங்குசெய்தல்,— ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில், முக்கியமாக கமத்தொழிலில் செழிப்புற்றிருத்தல் வேண்டுமென்பதால், நாட்டை வளப்படுத்தும் கமக்காரர்களுக்கு தமது தொழில் தொடர்பாக அபிமானம் ஏற்படும் வகையில் முறைசார்ந்ததொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.205/' 14

கௌரவ புத்திக பதிரண,— சலுகை விலையில் LED மின்குமிழிகளை நுகர்வோருக்கு வழங்குதல்,— இல்லங்களை ஒளியூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தரம் மிக்க LED மின்குமிழிகளின் விலை அதிகம் என்பதால், மின்சார சபை தலையிட்டு சலுகை விலையிலும் தவணைக் கொடுப்பனவு முறையிலும் இந்த மின் குமிழிகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்து தேசிய ரீதியில் பெருமளவில் மின்சாரத்தை சேமிப்பதற்கும், LED மின்குமிழிகளை மக்கள் மத்தியில் பிரபலய்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் இயலுமானவாறு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.206/' 14

கௌரவ புத்திக பதிரண,— சிறிய அளவிலான விளையாட்டுப் பொருட்கள் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்,— இலங்கையினுள் விளையாட்டுப் பொருட்களுக்கு பாரியதொரு சந்தை காணப்பட்ட போதிலும், நாட்டினுள் அவை சிறிய அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, அதற்காக சீனா முதற்கொண்ட ஏனைய நாடுகளுக்கு பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சப்படுவதால், சிறியதொரு செலவினத்தை ஏற்க வேண்டியதான இக் கைத்தொழிலை கிராமியப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் பொருட்டு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.208/ '14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் மருந்தாக்கல் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்,— இலங்கையில் மருந்தாக்கலானது தற்போது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், மருந்துகளின் இறக்குமதிக்கென வருடமொன்றில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்படுவதாலும், முன்னேற்றமடைந்த மனித வளத்தைக் கொண்டதொரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்து மருந்தாக்கல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.209/' 14

கௌரவ புத்திக பதிரண,— பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியல் பாடத்தைச் சேர்த்தல்,— பாடசாலை மாணவர் சமுதாயத்தை ஆரோக்கியமான மனநிலை கொண்ட, சாதுரியமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக தயார்படுத்தும் பொருட்டு ஆறாம் தரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பௌத்த உளவியல் மற்றும் மேலைத்தேய உளவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஒருங்கிணைத்து முறையாக தயாரிக்கப்பட்ட "உளவியலும் தியானமும்" என்ற பெயரில் ஒரு பாடத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.210/' 14

கௌரவ புத்திக பதிரண,— ஓய்வுபெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைத்தல்,— ஓய்வு பெற்றவர்களுக்கான உளவள ஆலோசனைச் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் பகல்நேர காப்பக சேவைகள் ஆகிய வயோதிகர்களுக்குத் தேவையான பல்வேறு நலன்புரிச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைப்பதற்கும், மேற்படி நிலையங்களை மையப்படுத்தி ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் ஓய்வு பெற்றவர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை, மேலதிக வருவாயை ஈட்டிக்கொள்ளக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.211/' 14

கௌரவ புத்திக பதிரண,— ஓய்வுபெற்றவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்தல்,— ஓய்வு பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கும், அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 214/ '14

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவித்தல்,— சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்மிக்கதும், கண்ணியம் மிக்கதுமான சேவையை வழங்குபவர்களாக ஆக்குவதற்கும் மேலும் இவர்களது வாழ்க்கைத் தொழில் மட்டத்தை உயர்த்துவதற்குமாக சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 215/ '14

கௌரவ புத்திக பதிரண,— காணி தொடர்பில் வலுவிலுள்ள சட்டங்களைத் திருத்துதல்,— இலங்கையில் தற்போது போலியான உறுதிகளைத் தயாரித்து காணிகளை விற்பனை செய்யும் மோசடிச் செயலொன்று நடைபெற்று வருவதோடு, இவ்விடயம் தொடர்பில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால், காணி உரிமை பற்றிய பாதுகாப்பு மேம்படுத்தப்படும் வகையிலும், தவறாளிகளுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கக்கூடிய வகையிலும் வலுவிலுள்ள சட்ட முறைமை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.216/'14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் பவளப்பாறைகளை பாதுகாத்தல்,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ள பவளப்பாறைகள் மனிதர்களின் செயற்பாடுகளால் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதால், மேற்படி பவளப்பாறைகளை பாதுகாப்பதற்காக மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கேற்றவாறு தனிநபர் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் சட்ட வரையறையில் மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்காக கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக பொருத்தமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.217/'14

கௌரவ புத்திக்க பதிரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்களில் பெண்களை சேவைக்கு அமர்த்துதல்,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மேற்படி வான்களில் பயணிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதியும் சகல பாடசாலை வான்களிலும் பணியாற்றுவதற்கு பெண்கள் அமர்த்தப்படுவதை கட்டாயமாக்குவதற்கான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.218/'14

கௌரவ புத்திக பதிரண,— மருந்துப் பொருட்களின் விலையை குறைத்தல்,— இலங்கையினுள் தேசிய ஔடதக் கொள்கையினை பிரகடனப்படுத்தி, ஔடதங்களின் பெயரில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை துரிதமாக ஆரம்பிப்பதன் மூலம் மருந்துப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தலையிடுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.219/'14

கௌரவ புத்திக பதிரண,— இணையத் தளத்தின் ஊடாக நடைபெறுகின்ற மருந்துப் பொருட்கள் விற்பனை உள்ளிட்ட மோசடிச் செயல்களைத் தடுத்தல்,— தற்போது இணையத் தளத்தின் ஊடாக தரமற்ற மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேனிவணப்புப் பொருட்களின் உற்பத்திகள் பாரியளவில் விற்பனை செய்யப்படுவதுடன், இத்தகைய மோசடிச் செயல்கள் எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் நல்லிருப்புக்கும் பாரியதொரு அச்சுறுத்தலாகும் என்பதால், இவற்றைத் தடுப்பதற்கான உரிய வேலைத் திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துதல் உகந்ததாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.220/ '14

கௌரவ புத்திக பதிரண,— விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையின்றி பயிர்ச் செய்கை செய்தல்,— அதிக நச்சுத்தன்மையுடைய விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கையில் தடை செய்து, பழைமைவாய்ந்த முறையில் சூழலுக்குகந்த பயிர்ச்செய்கை முறையொன்றை நாட்டில் அறிமுகம் செய்வதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விவசாய விஞ்ஞானிகள் மற்றும் சூழலியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து அவர்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் ஊடாக மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற ஆரோக்கியமான உணவை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.221/ '14

கௌரவ புத்திக பதிரண,— போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்டெடுத்தல்,— தற்போது இலங்கையில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்ற போக்கு அதிகரித்துள்ளதால், பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் தலையிட்டு முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 222/'14

கௌரவ புத்திக பதிரண,— தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை நியமித்தல்,— அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களின் போது தமது நிறுவனங்களை மிகஉயர்ந்த உற்பத்தித்திறன் மட்டத்தை நோக்கி வழிநடாத்தியுள்ள நிறுவனத் தலைவர்களை இனங்கண்டு அவர்களின் அறிவையும், அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், அந்நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முறையியல்களை ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் பதிலீடு செய்யக்கூடியவாறு மேற்படி நிறுவனத் தலைவர்களை உள்ளடக்கியதாக தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை தாபித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 223/'14

கௌரவ புத்திக பதிரண,— சமுதாய மருத்துவமுறை பற்றிய நிபுணத்துவச் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய பிரிவொன்றான சமுதாய மருத்துவமுறை தொடர்பான நிபுணத்துவத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அத்துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து துரிதமாக தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.224/'14

கௌரவ புத்திக பதிரண,— ஆங்கிலேயர்களால் தேசத் துரோகிகளாக வர்ணிக்கப்பட்ட இலங்கையர்களை தேசிய வீரர்களாக பிரகடனம் செய்தல்,— 1815 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெறுதல் வரையான காலப்பகுதியில் ஆங்கிலேயர்களுக்கெதிராக நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உயிரையும் பொருட்படுத்தாது போராடிய இலங்கையர்கள் தேசத் துரோகிகளாக வர்ணிக்கப்பட்டுள்ளதோடு, இவர்கள் அனைவரையும் விசேட வர்த்தமானப் பத்திரிகையொன்றின் மூலம் தேசிய வீரர்களாக பிரகடனம் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.225/'14

கௌரவ புத்திக பதிரண,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் சந்தைக்கு வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற, சந்தைப் படுத்துகின்ற மற்றும் அதற்குப் பக்கபலமாக உள்ள ஆட்கள் மற்றும் நிறுவனங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவுக்குக் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, தேவையான வசதிகளை குறைவின்றி பெற்றுக்கொடுப்பதற்கும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கக் கூடிய வகையில் வலுவிலுள்ள சட்ட முறைமையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.226/'14

கௌரவ புத்திக பதிரண,— நச்சுத்தன்மையற்ற உணவுற்பத்தியை ஊக்குவித்தல்,— உணவுடன் தொடர்புடைய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களை இலக்காகக் கொண்டு, தரத்தில் உயர்ந்ததும், ஆரோக்கியமானதுமான உணவுகளை நுகர்வோருக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு ஆற்றக்கூடிய சேவை தொடர்பாக விழிப்புணர்வூட்டி, மனோபாவ ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், அவ்வாறு நச்சுத்தன்மையற்ற உணவுகளை உற்பத்தி செய்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு கௌரவப் பட்டத்துடன்கூடிய விருது வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்குமான வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.227/'14

கௌரவ புத்திக பதிரண,— முறைகேடான விதத்தில் கைப்பற்றப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல்,— இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகள் பல்வேறான ஆட்கள் மற்றும் அமைப்புகளால் சட்ட விரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ளதால், மேற்படி காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் துரிதமாக தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.228/'14

கௌரவ புத்திக பதிரண,— ஆதிவாசி மக்களின் மேம்பாட்டுக்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையினுள் தற்போது வசிக்கும் ஆதிவாசி மக்கள் பற்றிய தனியானதொரு தொகை மதிப்பீட்டை மேற்கொண்டு, அவர்கள் உயிர் வாழ்வதில் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களை முறைசார்ந்த விதத்தில் இனங்கண்டு, அவர்கள் கௌரவமாக வாழக் கூடிய ஒரு சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான சாதகமானதொரு திட்டத்தை, ஆதிவாசிகளின் தலைவர்களும் உள்ளடங்கிய விதத்தில் நியமிக்கப்பட்ட கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.229/'14

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் சேதமடைந்த தொல்பொருட்களை பாதுகாத்தல்,— முப்பது ஆண்டு கால யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட தொல்பொருட்கள் பெருமளவில் அழிவடைந்ததோடு, இருப்பிலுள்ள தொல்பொருட்கள் பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு தகவல்களை திரட்டுவதையும், குறித்த தொல்பொருட்களை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் புனரமைப்பதையும் நோக்கமாகக் கொண்டு தொல்பொருளியலாளர்களை உள்ளடக்கிய கல்விமான்கள் குழுவொன்றை நியமித்தல் உசிதமாகுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.230/'14

கௌரவ புத்திக பதிரண,— பயிர்ச் செய்கைக்கான உள்நாட்டு விதைகளை பிரபல்யப்படுத்துதல்,— விவசாய இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படாது உள்நாட்டு சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பயிரிடக்கூடிய உள்நாட்டு விதை வகைகளை இனங்கண்டு அத்தகைய விதைகளை துரிதமாக நாடுபூராவும் பரவலாக்கி இரசாயன நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருட்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள், தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்குத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.231/'14

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு மொழிகள் கற்கைக்கான வசதிகளை வழங்கல்,— தனி நபர் அறிவாற்றலை தீர்மானிப்பதற்கு அவரிடமுள்ள மொழியறிவு முதன்மையான காரணியாக அமைவதால் ஆங்கில மொழி தவிர்ந்த ஏனைய முதன்மையான அந்நிய மொழிகளை கற்பதற்குத் தேவையான வசதிகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.232/'14

கௌரவ புத்திக பதிரண,— அனைத்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் செலவிடப்படுகின்ற நிதியை மட்டுப்படுத்தல்,— இலங்கையினுள் நடைபெறுகின்ற அனைத்து தேர்தல்களின் போதும் சில வேட்பாளர்கள் பாரியளவில் நிதியை செலவிடுவதுடன், நிதி செலவிட முடியாத போதிலும், நாட்டுக்கு சேவையாற்றக்கூடிய கல்விமான்கள் சிலருக்கு இதனால் பாதகமான நிலைமை ஏற்படுவதன் காரணமாக தேர்தல்களுக்கு செலவிடப்படுகின்ற நிதியின் அளவை மட்டுப்படுத்தக்கூடியவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.233/'14

கௌரவ புத்திக பதிரண,— காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட தொல்பொருட்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல்,— இலங்கை காலனித்துவ நாடாக காணப்பட்ட காலத்தில் எமது நாட்டிலிருந்து போர்த்துக்கள், ஒல்லாந்து மற்றும் பெரிய பிரித்தானியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொல்லியல் பெறுமதிமிக்க பொருட்கள் பற்றிய ஆய்வொன்றை நடாத்தி அப்பொருட்களை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.234/'14

கௌரவ புத்திக பதிரண,— பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல்,— பிக்குமார்களின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை பேணிப்பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்பான நீதிமன்ற விடயங்களுக்காக தனியான பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் அந்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு சட்ட ரீதியிலான அதிகாரத்தைப் பெறக்கூடிய வகையில் மேற்படி பிக்குமார் நீதிமன்றம் தாபிக்கப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.235/'14

கௌரவ புத்திக பதிரண,— நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்றை நியமித்தல்,— பாராளுமன்றம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் கட்டளைச் சட்டங்களுக்கு திருத்தங்களை முன்வைக்கக் கூடியதுமான சட்ட அதிகாரமுள்ள பிக்குமார்களின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்ட பொதுநிர்வாகம், சட்டம், வெளிநாட்டலுவல்கள் மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பாக சிறந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள கல்விமான்களான பிக்குமார்களை உள்ளடக்கிய நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.236/'14

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் காணப்பட்ட நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திற்கும், வாவிகள் தொழில்நுட்பத்திற்கும் புத்துயிரூட்டி பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், கற்கை நெறிகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பில் அறிவு நிறைந்தவர்களை உருவாக்க இயலுமான வகையில் “நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிலையம்” என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் தலையீட்டுடன் ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.237/'14

கௌரவ புத்திக பதிரண,— மகாவம்ச கற்கைக்கான நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கை வரலாற்றின் சுவடாக விளங்கும் மகாவம்சத்தைக் கற்பதற்காக பிக்குமாரின் தலையீட்டுடன் “மகாவம்சக் கற்கை ஆய்வு தேசிய நிறுவனம்” என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.238/'14

கௌரவ புத்திக பதிரண,— பௌத்த விரோத செயற்பாடுகளை தடுத்தல்,— அற நூல்கள் மற்றும் வெளியீடுகளை ஆய்வு செய்யும் மேன்மையான அறிவைக் கொண்ட சட்ட அதிகாரத்துடன் கூடிய கற்றோர்களைக் கொண்ட சங்க சபையொன்றை தாபிப்பதன் மூலம், ஏதேனுமொரு ஆக்கத்தை வெளியிடுவதற்கு முன்னர் அதனை மேற்படி சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர், சமூகமயமாக்குவதற்கு தகுதியில்லை எனில், திருத்தங்களை சமர்ப்பிப்பதற்கேற்றவாறான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் பௌத்த விரோத செயற்பாடுகள், வெளியீடுகள் இயற்றப்படுதல் மற்றும் பௌத்த தர்மத்தை தொடர்புபடுத்தி பொய்யான வரைவிலக்கணங்கள் தோற்றம் பெறுவதை தடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.239/'14

கௌரவ புத்திக பதிரண,— தேசப்பற்றுடைய கலைப் படைப்புகளை பாராட்டுதல்,— தேசத்தின் மீது அன்பு மற்றும் சுயமரியாதை ஏற்படும் வகையில் சுதேச மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய கலைப் படைப்புகளை வருடாந்தம் கௌரவிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.240/'14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களின் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களை ஆரோக்கியமான, உடல் நலம்மிக்க மற்றும் உடலுறுதி கொண்ட பிரஜைகளாக சமூகமயப்படுத்தும் நோக்கத்துடன் அவர்கள் தாம் விரும்பும் ஒரு விளையாட்டில் ஈடுபடுவதற்கும், நடைமுறை ரீதியிலான ஒழுக்கப் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் வகுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.241/'14

கௌரவ புத்திக பதிரண,— பௌத்த கலாசார தகவல் நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையினுள் அமைந்துள்ள பௌத்த மதத் தலங்கள், அதனுடன் இணைந்த இடைநேர்விளைவான பிரிவுகள் மற்றும் பௌத்த தேரர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, முறைசார்ந்த ரீதியில் கணனிமயப்படுத்தி, நவீன தொழில்நுட்ப கருவிகள், போதியளவு மனித மற்றும் பௌதீக வளங்கள் நிறைந்த "பௌத்த கலாசார தகவல் நிலையம்" எனும் பெயரிலான நிறுவனமொன்று அரசின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.242/'14

கௌரவ புத்திக பதிரண,— அறநெறிப் பாடசாலை பாடநூல்களை காலத்திற்கேற்ப திருத்துதல்,— பரீட்சையை இலக்காகக் கொண்ட,— அறிவை மட்டும் மையப்படுத்திய பாடநூல்களுக்குப் பதிலாக செய்முறைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட, அறிவை வளர்க்கக்கூடியதான, நாகரிகமானதொரு சமூகம் உருவாக்கப்படுவதை இலக்காகக் கொண்ட பாடநூல்களை புத்திஜீவிகளை உள்ளடக்கிய சபையொன்றின் ஊடாக தொகுத்து அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீமானிக்கின்றது.

பா.243/'14

கௌரவ புத்திக பதிரண,— சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குமுறையாக்கலுக்கான சபையொன்றை நியமித்தல்,— இலங்கையின் கலாசாரத்திற்கும், பண்பாட்டுக்கும், சமூக நல்லிருப்புக்கும் பொருந்தக்கூடிய வகையில் சர்வதேச பாடசாலைகளின் விடயப்பரப்புகளை தேவைக்கேற்ப ஒழுங்குமுறையாக்கக்கூடிய முழுமையான அதிகாரத்துடன் கூடிய சபையொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.244/'14

கௌரவ புத்திக பதிரண,— தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல்,— சுதேச வரலாற்று அறிவு, பண்பாடுமிக்கதன்மை, உற்பத்திச் சாத்தியத்தன்மை, அறிவுடைமை, பாரம்பரிய அறிவு, தேசப்பற்று, ஆரோக்கியம், திறமைமிக்கதன்மை மற்றும் சிறந்த மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல் ஆகிய பண்புகளின் மூலம் பூரணத்துவம்மிக்க வெற்றிகரமான பிரசைகளை உருவாக்கக்கூடியவாறு அமைக்கப்பட்ட தேசிய கொள்கையின் ஊடாக ஒட்டுமொத்த கல்வித் திட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.245/'14

கௌரவ புத்திக பதிரண,— குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய அம்சமொன்றான குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணத்துவத் துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து அவற்றை துரிதமாக தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மேற்படி குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்துவதற்குமான திட்டங்களை வகுப்பதற்கும் பொருட்டு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.246/'14

கௌரவ புத்திக பதிரண,— ஆயுர்வேத மருத்துவர்களின் சேவையை வெளிநாடுகளுக்கு வழங்குதல்,— ஆயுர்வேத மருத்துவப் பட்டப்படிப்பை நிறைவுசெய்யும் பட்டதாரிகளுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முறைசார்ந்த வேலைத் திட்டமொன்றை அமைத்து நடைமுறைப்படுத்தல் உசிதமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.247/'14

கௌரவ புத்திக பதிரண,— ஆயுர்வேத மருத்துவச் சட்டத்தை திருத்துதல்,— தற்போது வலுவிலுள்ள காலம் கடந்த ஆயுர்வேத மருத்துவச் சட்டம் மீதான திருத்தமொன்றைக் கொண்டு வந்து ஆயுர்வேத மருத்துவர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து, அந்த தொழிலுக்குரிய கௌரவத்தையும், மகத்துவத்தையும் பாதுகாக்க புதிய ஆயுர்வேத மருத்துவச் சட்டமொன்றை துரிதகதியில் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.248/'14

கௌரவ புத்திக பதிரண,— புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் புகையிரத பாதுகாப்பு முறைமையை உருவாக்கிய புத்தாக்குநர்களையும், அத் துறையுடன் தொடர்புடைய கல்விமான்களையும், புகையிரதத் திணைக்களத்தின் சகல துறைகளினதும் விற்பன்னர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.249/'14

கௌரவ புத்திக பதிரண,— பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்தல்,— பேருந்து பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம், வருடாந்தம் அச் சேவையை நிராகரிக்கின்ற சுமார் 1% - 2% பயணிகளை தக்க வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், அச் சேவையின் இருப்புக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆபத்தை குறைப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.250/'14

கௌரவ புத்திக பதிரண,— சிங்கள மொழிக்கு நியதியொன்றை வகுத்தல்,— சிங்கள மொழியில் எழுத்து வழக்கு மற்றும் பேச்சு வழக்கு இரு வகைகளை கொண்டுள்ளதோடு, න, ණ, ල, ළ வேறுபாடு, மெல்லின, வல்லின எழுத்துக்களை பயன்படுத்தல் மற்றும் சொல் வகைப்பாடு ஆகியன விவாதத்துக்குரியவையாக உள்ளதால் சிங்கள மொழிக்கென நியதியொன்றை வகுப்பதற்கு கல்விமான்கள் சபையொன்றை நியமித்து காலத்துக்கேற்ப ஏற்படும் மாற்றங்களையும் கவனத்திற்கொண்டு மொழியின் நிலைத்திருத்தலை உறுதிப்படுத்தக்கூடிய செயற்பாடொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.251/'14

கௌரவ புத்திக பதிரண,— உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல்,— பீடை கொல்லிகள் மற்றும் கைத்தொழில் செயற்பாடுகளிலிருந்து வெளியேறும் உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்கள் (Persistent Organic Pollutants – POPs ) பன்னிரண்டு வகை மாசாக்கல் காரணிகளை உள்ளடக்கியுள்ளதுடன், இவை மனிதனின் உடல் நலத்துக்கு மிகவும் பாதகமாயுள்ளதால், குறித்த இரசாயனப் பதார்த்தங்கள் சுற்றாடலுக்கு வெளியேற்றப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு முறைசார்ந்த ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.252/'14

கௌரவ புத்திக பதிரண,— அரசாட்சியில் பௌத்த தத்துவங்களை சேர்த்தக்கொள்ளல்,— சப்த அபரிஹானீய தர்ம, தச ராஜ தர்ம, ராஜோவாத ஜாதகய, குரு தர்ம ஜாதகய, கண்ட நிந்துக ஜாதகய, தெசதுர ஜாதகய, தேவதர்ம ஜாதகய, சதர சங்ரஹ வஸ்து, சக்கவத்தீ சிஹநாத சூத்ரய மற்றும் தர்ம பிரதீபிகாவ ஆகிய பௌத்த கற்பித்தல்கள் தொடாபில் பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் பிரதேச மட்டத்திலான சகல ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக நாட்டின் நல்லாட்சிக்கு அவர்களது வகிபாக பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலான ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.253/'14

கௌரவ புத்திக பதிரண,— இலத்திரனியல் கழிவுகளை அகற்றுதல்,— புளோரசன்ட் மின்குமிழ், தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, மின் உபகரணங்கள், பட்டரி, கனணி மற்றும் அவற்றின் பாகங்கள் கழிவுப் பொருட்களாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகையில் ஆசனிக், கட்மியம், பாதரசம் மற்றும் ஈயம் ஆகிய கன உலோகங்கள் சுற்றாடலில் சேர்க்கப்படுவதால், குறித்த இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்து சுற்றாடலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.254/'14

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் நல்லாட்சியை தாபித்தல்,— சீரற்ற ஆட்சியின் பண்புகளான தான்தோன்றித்தனமான கொள்கையாக்கம், அதிகாரவாதம், அமுலாக்கப்படாத மற்றும் அநீதியான சட்டங்கள், நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், அரசியலில் பிரஜைகளின் பங்களிப்பு குறைவடைதல் மற்றும் ஊழல் பரவுதல் ஆகிய விடயங்களை எமது நாட்டில் குறைவின்றிக் காணக்கூடியதாக உள்ளதோடு, இதன் காரணமாக நாட்டில் சீரற்ற ஆட்சி நிலவுகின்றமை தென்படுகின்றமையால், நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.255/'14

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கு சொந்தமான சுவடிகளை மீளப்பெற்றுக்கொள்ளல்,— இலங்கைக்கு சொந்தமான பெறுமதியான பல சுவடிகள் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் காணப்படுவதுடன், இவற்றில் உள்ளடங்கியுள்ள அறிவை தற்போதைய இலங்கை சமூகம் இழந்துள்ளமையால், மேற்படி சுவடிகளை எமது நாட்டுக்கு மீளப் பெற்று இவற்றில் அடங்கியுள்ள புராதன அறிவை சமூகமயமப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா.256/'14

கௌரவ புத்திக பதிரண,— உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதற்காக கமத்தொழிலின் பங்களிப்பைப் பெறுதல்,— தனிப் பயிர்ச்செய்கை முறைக்கு பதிலாக பல்வகைப் பயிர்ச்செய்கை முறை மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை முறையை பிரபல்யபடுத்தல், உயிர் பல்வகைத்தன்மைக்கு கேடு விளைவிக்கும் இரசாயன பதார்த்தங்களை கமத்தொழிலிருந்து நீக்குதல் மற்றும் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவ முறைமைகளை பயன்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக நாட்டில் உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதில் விவாசாயிகளை ஈடுபடுத்துகின்றதான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.257/'14

கௌரவ புத்திக பதிரண,— மக்களின் உணவு கிடைக்கும் உரிமையை பாதுகாத்தல்,— ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் கட்டமைப்புக்களுக்கு அமைய உணவு கிடைப்பதற்கான அடிப்படை உரிமையை இலங்கை மக்கள் இழக்கும் நிலைமை, அரசாங்க கொள்கை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதில் காணப்படுவதாலும், மேற்படி சமவாயங்களுக்கு அமைய நாட்டு மக்களின் உணவுப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பு முற்றாக அரசாங்கத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாலும் அரசாங்கம் தலையீடு செய்து உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற மற்றும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான உணவு நாட்டு மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்கின்ற முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை வகுத்து மக்களின் உணவு கிடைக்கும் அடிப்படை உரிமையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.258/'14

கௌரவ புத்திக பதிரண,— அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல்,— அசேதனப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உள்ளாக்குதலும், அசேதனப் பொருட்களின் உபயோகத்தைக் குறைப்பதும், உபயோகத்திலிந்து நீக்கப்படுகின்ற அசேதனப் பொருட்களை சேகரிப்பதற்குமான பொறிமுறையொன்றை அமைத்தல் மற்றும் அசேதனப் பொருட்களை பயன்படுத்துவதற்கான சுற்றாடல் சட்ட, விதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் சுற்றாடல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் நன்நிலைத்திருத்தலுக்காக அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.259/'14

கௌரவ புத்திக பதிரண,— சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டல்,— ஆரோக்கியமான தேசமொன்றைக் கட்டியெழுப்பல் மற்றும் சுதேச ஆயுர்வேதத்தின் நன்நிலைத்திருத்தலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு சுதேச மருந்து வகைகள் மற்றும் கைமருந்துகள் பற்றி முறைசார்ந்த விடய விளக்கங்களைக் கொண்ட பாடமொன்றை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.